**<u>செ.வெ.எண்.424</u>** **<u>நாள்.11.7.2007</u>**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களை மத்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் டாக்டர் ஒய்.வி.ரெட்டி அவர்கள் மரியாதை நிமித்தமாக இன்று (11.07.2007) தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போது, விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்காக மத்திய ரிசர்வ் வங்கி எடுத்து வரும் நடவடிக்கைகள் தொடர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள். வட்டார கிராம வங்கிகளின் (Regional Rural Banks) சேவை தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று விரைவில் ஆணைகள் வெளியிடப்படும் என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் தெரிவித்தார். மேலும், தமிழக அரசின் நிதி மேலாண்மை குறித்து ரிசர்வ் வங்கியின் பாராட்டுதல்களைத் தெரிவித்ததோடு, கடன் முதலீடு விகிதத்தில் (Credit – Deposit Ratio) தமிழ்நாடு நமது நாட்டிலேயே முதலிடம் வகிப்பது குறித்தும் மகிழ்ச்சி தெரிவித்தார். கடலூர் மாவட்டத்தைத் தொடர்ந்து, கன்னியாகுமரி, திருவாரூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் வங்கிக் கணக்கு தொடங்கும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும் என்றும் ரிசர்வ் வங்கி ஆளுநர் குறிப்பிட்டார்.

----

**வெளியீடு** : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.

* * *